1996 ஆகஸ்ட் 9] [திரு. ச. அழகிரி]

நடத்தலாம் என்பதற்காகத்தான் நிலத்தைக் கொடுத்தார்கள். ஆனால், நிலம் கொடுத்து இவ்வளவு காலம் ஆகியும், அவர்களுடைய கையில் பணம் கிடைக்காத காரணத்தால், வறுமையிலே வாடுவது மட்டுமல்ல, வேறு இடங்களில் நிலம் வாங்க முடியாத சூழ்நிலையும் ஏற்பட்டு இருக்கிறது.

இரண்டாவது நிலக்கரிச் சுரங்கம் அங்கே வந்துவிட்ட காரணத்தால், அருகாமையில் உள்ள நிலங்களினுடைய விலையும் உயர்ந்துவிட்டது. எனவே, இவைகளை எல்லாம் மனதில் வைத்து, ஒரு பொதுத் துறை நிறுவனம் சமூக நோக்கம் இல்லாமல், சமூகக் கண்ணோட்டம் இல்லாமல், ஏழை மக்களுடைய வாழ்க்கைப் பிரச்சினையை அறிந்து கொள்ளாமல், ஏழை விவசாயிகளுக்கு அளிக்கின்ற அந்தத் துன்பத்தை மாநில அரசாங்கம் தடுத்து நிறுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, அந்த நிலக்கரி நிறுவனத்தினுடைய உயர் அதிகாரிகள் இந்த விஷயத்திலே அக்கறை செலுத்தவில்லை. ஏற்கனவே முதல் நிலக்கரிச் சுரங்கத்திலே, இதுபோன்ற ஒரு பிரச்சினை ஏற்பட்டபோது, நம்முடைய கலைஞர் அரசாங்கம் அன்றைக்கு இருந்தபோது, தலைமைச் செயலாளரை அனுப்பி, அந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைத்தார்கள். எனவே, அதேபோன்று இந்த முறையும் நம்முடைய தலைமைச் செயலாளர் அவர்களை அனுப்பி, நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தினுடைய தலைவரோடு பேசி, 15 தினங்களுக்குள் அவர்களுக்குச் செலுத்தவேண்டிய தொகையைச் செலுத்தினால் அக்கம்பக்கத்து கிராமத்திலேயிருக்கிற வேறு நிலங்களை வாங்கி அவர்கள் விவசாயம் செய்வதற்கு ஏதுவாக இருக்கும். எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதிலே கவனத்தைச் செலுத்தி, ஏழை விவசாயிகளுக்கு பணம் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா? இரண்டாவதாக, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, நிலம் கொடுத்தவர்களுக்கு, வீட்டுமனை கொடுத்தவர்களுக்கு நிலக்கரிச் சுரங்கத்திலே வேலை கொடுப்பதற்கும் - குடும்பத்திலே ஒருவருக்கு நிலம் கொடுத்தவர்களிலே குடும்பத்திலே ஒருவருக்கு வேலை கொடுப்பதற்கும் - அரசு முன்முயற்சி எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி பகுதியிலே உள்ள கிராம மக்கள்பால் மிகுந்த அக்கறைகொண்டு, ஆர்வத்தோடு இந்தப் பிரச்சினை விரைவில்

தீரவேண்டும் என்று எண்ணுகின்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்களுடைய இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பு மிக முக்கியமானது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். இதுபற்றி சில விவரங்களைக் கூறுவது என்னுடைய கடமை.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், அதன் இரண்டாம் சுரங்க விரிவாக்கம் மற்றும் அனல் மின் நிலையம் அமைப்பதற்காக சுமார் 9 ஆயிரம் ஏக்கர் நிலம், 1978-79 ஆம் ஆண்டில் கையகப்படுத்தப்பட்டது. இந்தத் திட்டத்திற்காக நிலம் கொடுத்த நபர்கள் தங்களுக்கு நியாயமான இழப்பீடு அளிக்கப்படவில்லை என்பதற்காக, கடந்த 16 அல்லது 17 ஆண்டுகளாக கிளர்ச்சியிலே ஈடுபட்டு, கோரிக்கைகளை வைத்து வருகின்றார்கள். அவர்களுடைய கோரிக்கைகளின்படி, அதிகரிக்கப்பட்ட நஷ்ட ஈடு கொடுப்பதற்கு சுமார் 100 கோடி ரூபாய் கூடுதல் தொகை நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திற்குத் தேவைப்படும் என்பதால் அதனைத் தவிர்க்கும் பொருட்டு, நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் நிர்வாகமே, நீதிமன்றத்தில் வழக்காட விரும்பியது. 1989-90 ஆம் ஆண்டில், தி.மு.க. அரசு இடையிலே பொறுப்பேற்று வந்தபோது, இதுகுறித்து பேசி, நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிர்வாகம் நஷ்டஈட்டுத் தொகையாக 20 கோடி ரூபாய் வரையிலும் கொடுக்க முன்வந்தது.

மேலும் இதைப்பற்றி தொடர்ந்து நடந்த கூட்டத்தின் முடிவுகளின்படி தென் ஆற்காடு மாவட்ட ஆட்சியாளர், 36 கோடி ரூபாய் நஷ்ட ஈட்டுத் தொகை பெற்றுத் தர ஒப்புக் கொண்டார்கள். ஆனால் நிலம் இழந்த விவசாயிகளுடைய கோரிக்கையின்படி 50.67 கோடி ரூபாய் தேவைப்பட்டது. இதற்கிடையில், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் உயர்நீதிமன்ற டிவிஷன் பெஞ்ச் முன்பாக வழக்காடியதில் உயர்நீதிமன்றம், நஞ்சை, முந்திரித் தோப்பு ஆகியவைகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 30 ஆயிரம் வீதமும், பாசனப் புஞ்சை ஏக்கர் ஒன்றுக்கு 25 ஆயிரம் ரூபாயும், வீட்டுமனைகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 20 ஆயிரம் ரூபாய் வீதமும், மானாவாரி நிலம் ஏக்கர் ஒன்றுக்கு 15 ஆயிரம் ரூபாய் வீதமும், மாமூல் கறம்புக்கு ஏக்கர் ஒன்றுக்கு 12,500 ரூபாய் வீதமும், இத்துடன் 30 சதவீத ஊக்கத் தொகையும், நிலம் எடுத்த தேதியிலிருந்து 9 சதவீத வட்டியும் கொடுக்க வேண்டும் என்று, 1995-ஆம் ஆண்டு பிப்ரவரி-மார்ச் மாதத்தில் தீர்ப்பு அளித்தது.

முற்பகல் 10-30

நீதிமன்றம் வழங்கிய அதிகரித்த நஷ்ட ஈட்டை நிர்வாகம் கொடுக்க மறுத்து மேல்முறையீடு செய்தபோதிலும் பின்னர் நிலம்

1996 ஆகஸ்ட் 9] [கலைஞர் மு. கருணாநிதி]

இழந்தவர்களுடைய குடும்பத்திற்கு ஓரளவிற்கு அதிக நஷ்ட ஈடு கொடுக்க முன்வருவதோடு சில நிபந்தனைகளுக்குட்பட்டு வேலைவாய்ப்புகளும் தர நிர்வாகம் முன்வந்ததோடு இந்தத் திட்டத்திற்கு நில உரிமையாளர்கள் சம்மதிக்கவில்லையென்றால் உச்சநீதிமன்றத்திற்கு இந்தப் பிரச்சினையைக் கொண்டு செல்ல நேரிடும் என்றும், நிர்வாகம் கருத்து தெரிவித்தது. மாவட்ட ஆட்சியாளர் தன்னுடைய அறிக்கையில் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் நிர்வாகம் நிலமிழந்த விவசாயக் குடும்பங்களின் உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க முன்பு ஒப்புக்கொண்டது என்றும், நிலம், வீடு போன்ற தங்களது அசையா சொத்துக்களை நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் திட்டத்திற்காக விட்டுக்கொடுத்த கிராமவாசிகள் 10,000 பேர் வேலைவாய்ப்பிற்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும், இந்நிறுவனம் சுரங்கத் திட்டத்தை விரிவுபடுத்துவதற்காக மேற்கொண்டுள்ள முயற்சிகளால் இன்னும் பல குடும்பங்கள் வெளியேற்றப்படும் நிலை ஏற்படும் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். தற்போது என்.எல்.சி. நிறுவனத்திற்கு எதிராக விவசாயிகள், மற்றவர்களின் சங்கங்களும் நிலமிழந்தவர்களும் கிளர்ச்சி செய்து வருகிறார்கள். எனவே, இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு என்.எல்.சி. அதிகாரிகள் மற்றும் அரசு அதிகாரிகள், கிராம மக்களுடைய, நிலம் இழந்தவர்களுடைய பிரதிநிதிகள் கொண்ட ஒரு உயர்மட்டக் குழுவை அமைத்து விவாதித்து முடிவு எடுக்கலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் ஆலோசனை தெரிவித்துள்ளார். நீண்டகாலமாக இருந்து வருகின்ற இந்தப் பிரச்சினையை விரைவில் முடிக்க வேண்டுமென்ற அக்கறை மாண்புமிகு திரு. அழகிரி அவர்கள் இங்கே சொல்லிக் காட்டியதைப் போல் இந்த அரசுக்கும் இருக்கிறது. திரு. அழகிரி போன்றவர்கள் மற்றும் அந்த வட்டாரத்திலே உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரின் துணையோடும் இந்த நிலம் இழந்தவர்களுக்காக அங்கே பாடுபடுகின்ற சங்கங்களுடைய உதவியோடும் ஒரு உயர் மட்டக் குழுவை அமைத்து விவாதித்து விரைவிலே நல்ல முடிவை உருவாக்க இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என்று தெரிவித்து அமைகின்றேன்.

**(ஆ) ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டத்தோடு வலங்கைமான் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்க்கக் கூடாது என்ற கிளர்ச்சி குறித்து—தொடர்ச்சி**

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சருடைய நல்ல விளக்கத்திற்கு நன்றியை நான் தெரிவித்துக்